

# மழை வேண்டி சிறப்புப் பிரார்த்தனை

அன்புடையீர், வணக்கம்.

ஒருமுறை மேற்கு வங்காளத்தில் கடும் பஞ்சம் நிலவியது. அன்னை ஸ்ரீசாரதாதேவியிடம் சென்று மக்கள் தங்கள் கஷ்டங்களைக் கூறினர். உடனே அன்னை, "பஞ்சத்தில் வாடும் மக்களிடம், தாமரை மலர்களால் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பக்தியுடன் பூஜிக்கச் சொல்லுங்கள். நிச்சயம் மழை பெய்யும்" என்று கூறி அருளினார். அதன்படி பூஜை செய்யப்பட்டது, அன்று மாலையே பல மணி நேரம் மழை கொட்டித் தீர்த்தது.

இன்று தமிழகத்தில் மழையின்றி விவசாயம் குன்றி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஏரிகள் பாளம்பாளமாகச் சிதறிக் கிடக்கின்றன. பல நகரங்களிலும் குறிப்பாக, சென்னையில் குடிநீர்ப் பிரச்னை பெருகி வருகிறது.

மக்களின் கஷ்டம் தீரவும், நாடு வளம் பெறவும் மழை வேண்டி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு 1008 தாமரை மலர்களால் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சிறப்புப் பூஜை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று திருக்கோயிலில் ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தாமரை மலர்களால் அர்ச்சனை, ஸ்ரீபாணேஷ்வர சிவலிங்கத்திற்கு கங்காபிஷேகமும், அன்னை ஸ்ரீசாரதாதேவிக்குக் குங்கும அர்ச்சனையும் மற்றும் சுவாமி விவேகானந்தருக்கு விபூதி அர்ச்சனையும் நடைபெறும்.

பக்தர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குருதேவரின் அருளைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாள் : 18.5.2019 - சனிக்கிழமை
நேரம் : காலை 8.45 மணி முதல் 11 மணி வரை
இடம் : ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.

இறைவன் தொண்டில்,
**சுவாமி கௌதமானந்தர்**
தலைவர்


## ஸ்ரீராமகிருஷ்ண மடம்

31, ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை-4 ☎ 2462 1110
Email: mail@chennaimath.org; Website: www.chennaimath.org



# Special Worship for Rain

Dear Devotees and Friends,

Once in West Bengal, a severe drought situation prevailed. People implored their hapless situation to Holy Mother Sri Sarada Devi. The Mother blessed them saying, 'Worship Sri Ramakrishna with lotus flowers with great devotion. Rain will come for sure.'

Special worship was performed and that very day there was a heavy rainfall for a few hours.

Tamilnadu is facing now a similar drought with farmers on the brink of crop failure with dried up lakes and ponds. To seek relief for the people suffering from the distress of acute shortage of drinking water, we are organizing a special worship of Sri Ramakrishna with 1008 lotus flowers in our Math.

Worship of Sri Baneshwara Shiva Linga with the holy water of Ganges, of Sri Sarada Devi with Kumkum and of Swami Vivekananda with Vibhuti will be held simultaneously.

We invite all to participate in the program and receive the blessings of Bhagavan Sri Ramakrishna.

Day : 18.5.2019 - Saturday
Time : 8.45 AM to 11 AM
Place : Sri Ramakrishna Math, Chennai

In the service of the Lord,
**SWAMI GAUTAMANANDA**
Adhyaksha


## Sri Ramakrishna Math

31, Ramakrishna Math Road, Mylapore, Chennai-4 ☎ 24621110
Email: mail@chennaimath.org; Website: www.chennaimath.org